பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-4-2013) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

77. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

120. மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

121. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) திட்டச் சாதனை, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

122. மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

123. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) திட்டச் சாதனை, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

[2013 ஏப்ரல் 18

124. கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சிப் பணிகள் என்கிற சிறு நூல். (தமிழ்)

125. வளர்ச்சிப் பாதையில் மீன் வளத் துறை என்கிற சிறு நூல். (தமிழ்)

126. "புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள், 2012" என்கிற சிறு நூல். (தமிழ், ஆங்கிலம்)

127. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)

128. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS